மலர் -1 இதழ் -6

# தமிழக மக்கள் இறையாண்மை

தி.பி.2054 ஆடவை (ஆனி) 2023 ஜூன் - ஜூலை

தனிச்சுற்றுக்கு மட்டும்
நன்கொடை ரூ. 30




# பார்ப்பனிய ஆணவமும் அதிகாரத் திமிரும்

# என்றும் அந்தியூர் கி.ரவிச்சந்திரனின் நினைவுக் கவிதைகள்



## அப்பா

மகனுக்காக உழைக்கிறேன்
மனசு வலித்தது
என் தந்தையை நினைத்தபோது

## கோயில்

நான் இட்ட
பிச்சை
தட்டேந்தியவர்
உள்ளே
கையேந்தியவர்
வெளியே

## நெசவாளி

வண்ண வண்ணமாய்
சாயம் ஏற்றி
விதவிதமாய் தீட்டி
விழா காலங்களில்
விடிய விடிய
அவன் நெய்த பட்டுப்புடவை
வின்னை முட்டும் அளவுக்கு
விலை போனது
ஆடையகத்தில்
அழகு பெண் ஒருத்தி
தோளில் போட்டு காட்டினாள்
கூலிக்கு நெய்த அவனோ
தெருவோர கடைகளில்
மலிவு விலையில்
மனைவிக்கும் மகளுக்கும்
புடவை தேடினான்



## கல்விக் கடன்

பிள்ளையின் படிப்புக்காய்
வங்கியில் வாங்கியக்
கடன்
வாசலில் வந்து
நின்றது
வட்டியோடு
பெற்ற கடன் பற்றி
ஒற்றை வரியில்
சொல்லி முடித்தான்
மகன்
பெத்த கடன்

தொடர்ச்சி கடைசி பக்கம் உள் அட்டையில்

மலர்-1 இதழ்-6

சாதி ஒழிப்போம் !

தமிழரை இணைப்போம் !

தமிழ்த் தேச இறையாண்மை மீட்போம் !

ஆசிரியர் : திருமொழி

ஆசிரியர் குழு : பாரி, ரூபன், முத்துமுருகன், செந்தில்

சட்ட ஆலோசனை :

வழக்கறிஞர் இரா.வைத்தீஸ்வரன்

தொடர்பு முகவரி :

243/1, பெரியார் நகர்,

காட்டு நாவல்,

கந்தர்வகோட்டை அஞ்சல்,

புதுக்கோட்டை மாவட்டம்,

அ.கு.எண் : 613 301.

தொடர்பு எண்கள் : 76674 43935

99431 14128

# பார்ப்பனிய ஆணவமும் அதிகாரத் திமிரும

*மோடி அரசு உடனடியாக வீழ்த்தப்பட வேண்டும். கடந்த ஒன்பது ஆண்டுகளில் தேசிய இனங்களை ஒழிப்பதே அதன் முதன்மைச் செயல்பாடாக இருந்து வருகிறது. முதலாவதாக, ஜம்மு-காஷ்மீர் தேசிய இனத்தின் மாநில இருப்பையே முற்றாக ஒழித்துக் கட்டியது. எல்லா மாநிலங்களையும் ஒழித்து 100 ஜனப்பத மண்டலங்களாக இந்தியாவை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. தேசிய இனங்களின் பொருளாதாரத்தை முற்றாக ஒழிக்கும் திட்டம் தான் ஜி.எஸ்.டி.வரித் திட்டம். பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலங்களின் பொருளாதாரத்தை ஒழித்துக்கட்டுவது மோடி அரசின் கொள்கையாகும்.* அதனால் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ஜி.*எஸ்.டி.வரியைக் கொடுக்க மறுக்கிறது.*

*மணிப்பூர் மக்களை சாதி அடிப்படையில் மோத விட்டு பிளவுப் படுத்தி வருகிறது. சாதிய மோதலை இந்துத்துவ-கிறித்துவ மோதலாக மாற்றி 40,000-த்துக்கும் மேலான மக்களை மணிப்பூரை விட்டு வெளியேற்றுகிறது. அவர்களை இந்துத்துவத்தில் இழுக்க கட்டாயப் படுத்துகிறது. இடஒதுக்கீட்டு கொள்கையை சீர்குலைக்கிறது. நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் இந்து முசுலீம் மோதலை உருவாக்கி வருகிறது. உணவு உண்பதிலும் உடை உடுத்துவதிலும் கூட பார்பனியக் கொள்கையைத் திணிக்கிறது. தேர்தலில் ஒரு இடத்தில் கூட முசுலீம்களை நிறுத்தாமல் தானே இந்துக்களின் ஒரே தலைவன் எனக் காட்டிவருகிறது. கர்நாடகத் தேர்தலிலும், உத்திரப் பிரேதேசத்திலும், பீகாரிலும் இம்முயற்சியை பா.ஜ.க. மேற்கொண்டது*

*கர்நாடகத்தில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை என்றாலும் இசுலாமிய எதிர்ப்பு உணர்வை மக்களிடம் ஏற்படுத்தியதை பா.ஜ.க.வின் வெற்றி இடங்கள் காட்டுகின்றன. ஏறக்குறைய எட்டு மாதங்கள் விவசாயிகளின் போராட்டம் டில்லியில் நடைபெற்றது. லட்சக்கணக்கில் விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களைப் பார்த்து பேசக் கூட மோடி போகவில்லை. மோடி ஒரு கொலைகாரன் என்று மக்களை உணரச் செய்யும் வெளியிடாகேவே பி.பி.சி.-யின் ஆவணப் படம் வெளிவந்து உறுதி செய்தது. உடனே மோடி அரசு பி.பி.சி.-யின் ஆவணப் படத்தை வெளியிடத் தடை ஏற்படுத்தியது. மோடிக் கும்பலின் மீது விழுந்த மாபெரும் இன்னொரு இடி இண்டன்பர்க் அறிக்கை வெளியிட்ட அதானியின் பங்குச் சந்தை*

*திருட்டாகும். அதானி குழுமம் பல லட்சம் கோடி ரூபாய் பங்குச் சந்தையில் மோசடி செய்வதற்கு பி.ஜே.பி. மோடிக் கும்பல் தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியுள்ளது. கொரானா காலத்தில் உலகில் உள்ள முதலாளிகள் பெரும் சரிவைச் சந்தித்தப் போது அதானி உலகப் பெரும் பணக்காரர்களின் வரிசையில் இரண்டாம் இடத்தை தாவிப்பிடித்தார். இது குறித்த விவாதத்தை மோடிக் கும்பல் பாராளுமன்றத்தில் நடத்த மறுக்கிறது. எனவே ஜனநாயகத்தை பெயரளவுக்கு ஏற்காத கட்சிதான் பி.ஜே.பி. என்று மக்கள் பெருமளவு உணரத் தொடங்கிவிட்டனர்.*

*மல்யுத்த போட்டிகளில் வெற்றிகளைப் பெற்ற பெண்கள் மீது பாலுறவு மோசடிகளைச் செய்த பெருங்கயவன் பிரிஜ் பூஷன் சிங் பா.ஜ.க. கட்சியின் உத்தரப் பிரேதேச தலைவர்களில் ஒருவன். ஜனவரி மாத இறுதியிலேயே அவன் மீது மல்யுத்த வீரர்கள் குற்றம் சுமத்தினர். காவல் துறை மல்யுத்த வீர பெண்களின் குற்றச்சாட்டை ஏற்கவே இல்லை.. பெண் வீரர்கள் நீதிமன்றதிற்கு சென்று நீதிமன்றம் காவல்துறையை குற்றாய்வு செய்து வழக்கைப் பதிவு செய்யும்படி அறிவித்த பின்தான் காவல் துறை வழக்கைப் பதிவு செய்தது. குற்றவாளியின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாகப் போராடிய பெண் வீரர்கள் மீது கடும் தாக்குதலை நடத்தியது, கைது செய்தது. இதுதான் பி.ஜே.பி. மோடி மன்னனின் ஆட்சி. அமித்ஷா பெண் வீராங்கனைகளை வேலைகளிலிருந்து நீக்கப்போவதாக மிரட்டியுள்ளார்.*

*புதிய பாராளுமன்ற திறப்பு மோடியின் இழிநிலையை மக்களுக்கு அம்பலப்படுத்தியது. செங்கோலை அவர் வைத்து நடத்திய நாடகம் தமிழ் நாட்டு மக்களுக்கு இரண்டாம் புலிகேசி வடிவேலை நினைவுப்படுத்தியது. செங்கோலை தமிழ்நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். கண்ணகியின் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்த பாண்டிய மன்னன் செங்கோலுடன் வீழ்ந்து உயிர்விட்டான். "நானே கள்ளன்" என்று கூறி நேர்மையின் உச்சத்தில் இருந்து உயிர்விட்டான். அவனது மனைவியும் உயிர்விட்டாள். பாண்டிய மன்னனின் செங்கோல் வீழ்ந்தது. பல்லாயிரம் கொலைகளுக்கு காரணமான மோடியின் கையில் செங்கோல் இருக்கிறது. அவரது மனைவியாக அமித்ஷா இருக்கிறார். அந்த செங்கோல் தமிழ்நாட்டுடையது. அது மோடியை அமித்ஷாவை வீழ்த்தும் என மக்கள் நம்புகின்றனர்.*

*பி.ஜே.பி. மோடிக் கும்பல் கொலை, கொள்ளையில் மட்டுமல்ல, நிர்வாகத்திலும் கோமாளிகள் என்பதற்கு பல சான்றுகள் உண்டு. அதில் ஒடிசாவில் நடைபெற்ற கோரமண்டல் அதிவிரைவு தொடர்வண்டி விபத்தும், பணம் மதிப்பு இழப்பு நடவடிக்கையும்*

*சிறந்த எடுத்துக்காட்டுகள். 2016 நவம்பர் 8-ல் ஒரே இரவில் 500, 1000 ரூபாய் நோட்டுகள் பண மதிப்பை இழந்தன. இதற்கு காரணம் கருப்புப் பணத்தை ஒழிப்பதாக மோடிக் கும்பல் கூறியது. அது தோல்வியில் முடியவே, 2023 செப்டம்பர் 30-லிருந்து 2000 ரூபாய் நோட்டுகள் பண மதிப்பு இழப்பை அறிவித்துள்ளது. இந்நடவடிக்கையால் 500,1000 ரூபாய் நோட்டுகளை மாற்ற மக்கள் வரிசையில் காத்துக்கிடந்து நூற்றுக்கணக்கானோர் இறந்ததும், நாட்டின் பொருளாதாரம் முறிந்ததும்தான் மிச்சம்.*




அதிகாரத்திமிரும் - ஆணவத்தின் உச்சமும்தான் பார்ப்பனியத்தின் நடைமுறைக் கொள்கை. மோடியும், அமித்ஷாவும் பார்ப்பனியத்தின் கைக்கூலிகேளே. இதர அமைச்சர்களும் பார்ப்பனிய ஆளும்வர்க்கத்தின் எடுபிடிகளே. இன்றைய அரசு அதிகாரம் பார்ப்பனிய அதிகாரமே என்பதை இந்திய நாட்டின் அனைத்து தேசிய இன மக்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இதனை மிகத்தெளிவாக உணர்ந்து கொண்டவர்கள் தந்தைப் பெரியாரும், அம்பேத்கரும்தான். ஆனால் பெரியாரை இழிவுப் படுத்துவதை கொள்கையாகக் கொண்ட பார்ப்பனியம் அம்பேத்கரை தன்னுடன் இணைத்து கொள்ள பெரும் நாடகங்களை நடத்தி வருகிறது. அம்பேத்கர் பெயரை பயன்படுத்தும் பிழைப்புவாதக் கட்சிகளை தன்னுடன் இழுத்துக் கொள்கிறது. அம்பேத்கரின் இந்தியக் கொள்கையை பார்ப்பனியக் கூட்டம் தனது ஆதிக்கக் கொள்கையாக பயன் படுத்துகிறது. பெரியாரின் தமிழ்நாடு விடுதலைக் கொள்கை பார்ப்பனியத்திற்கு பேரிடியாக இருப்பதால் பெரியாரை பொய்யாகக் கூட பார்ப்பனியக் கூட்டத்தால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் பெரியாரியத்தை முற்றாக விட்டுவிட்ட

அ.தி.மு.க. அமைப்பையும், பெரியாரியத்தை முதன்மையாகப் பயன்படுத்த தயங்கும் தி.மு.க.-வையும் பார்ப்பனியம் தனக்குச் சாதமாக மாற்றிக் கொண்டுதான் வருகிறது. பெரியாரின் தேசிய இன உணர்வு கொள்கையும், அம்பேத்கரின் ஜனநாயகக் கொள்கையும் பார்ப்பனியதுக்கு பேரச்சுறுத்தலாக இருக்கிறது. நமது தமிழ்த் தேச இறையாண்மை அமைப்பு மார்க்சியத்தை முதன்மையாகக் கொண்டு செயல்படுகிறது. மார்க்சிய-லெனினிய மாவோவிய சிந்தனை நமது தத்துவ, அரசியல், அமைப்பு வழியாகும், நமது அரசியல் வழி *தமிழ்த்தேச இறையாண்மையை தமிழக மக்களிடம் கொண்டு செல்வதாகும். அதனை முன்னெடுப்போம் வெற்றி பெருவோம்*

## திராவிட மாடல் தி.மு.க.வின் சமூகநீதியும் வேங்கைவயலும்
-பாரி



புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், முத்துக்காடு ஊராட்சியில் வேங்கைவயல் என்பது பட்டியலின பறையர் சாதி மக்களை மட்டுமே கொண்ட 26 குடும்பங்கள் 30க்கும் மேற்பட்ட வீடுகளில் வாழும் சிற்றூராகும். 2012.2022 நாளிலிருந்து ஒரே மாதிரியான நோய்த் தொற்றின் காரணமாக நான்கு குழந்தைகள் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர். மருத்துவரின் கூற்றுப்படி குடிநீர் தொட்டியை ஆய்வு செய்தபோது மலம் கலந்தது தெரியவருகிறது. இதனை அறிந்த மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு, கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே மற்றும் அதிகார வர்க்கங்கள் படை சூழ 26.12.2022 அன்று வேங்கைவயலுக்கு செல்கின்றனர். அப்போது அங்கு பட்டியல் சாதியினர் கோவிலுக்குள் செல்லமுடியாது, தேனீர் கடையில் தனிக்குவளை முறை ஒவ்வொரு சாதிக்கும் இருக்கிறது, பட்டியலின மக்களுக்கு 100 நாள் வேலை வழங்கப்படவில்லை, அவர்களது நிலங்கள், வரத்துவாரி ஆகியன பரிக்கப்பட்டுள்ளது என்பதை கூடுதலாக அறிகின்றனர். நிலை இவ்வாறிருக்க இறையூரில் உள்ள முக்குலத்தோர் பிரிவிலுள்ள அகமுடையர்களும் (சுமார் 30 குடும்பங்கள்), வலையர் எனும் முத்தரையர்களும் (சுமார் 270 குடும்பங்கள்) சேர்ந்து "நாங்களெல்லாம் ஒன்றாகத்தான் இருக்கிறோம். ஒரு சிக்கலும் இல்லை" என்று முத்தையா உள்பட கூறியுள்ளனர். இதனையறிந்த மாவட்ட ஆட்சியர் பட்டியலின மக்களை கோவிலுக்குள் அழைத்துச் செல்ல முயன்றபோது "ஏய் எச்சக்களா நாய்களா வெளியே போங்க" என்று சாமியாடி கூறிய சிங்கம்மாளையும் (முத்தரையர்), தேனீர் கடையில் தனிக்குவளை வைத்திருந்த மூக்கையா மற்றும் அவரது மனைவி மீனாட்சி (அகமுடையார்) ஆகியோர் 28.12.2022 அன்று கைது செய்யப்படுகின்றனர்.

### முத்தையா நீரில் மலம் கலத்தல்

வேங்கைவயல், இறையூர் இரண்டையும் பிரிப்பது ஒரு குறுக்கு சாலை மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி வேங்கைவயலில் உள்ளது. இத்தொட்டியை சுமார் ஒரு ஆண்டுகளுக்கு முன்னால் இயக்கியவர் சண்முகம். இவர் முத்தரையர். இவர் சுமார் 30 ஆண்டுகளாக வேங்கைவயலில் நீர்த் தேக்கத் தொட்டியின் ஆப்ரேட்டராக பணிபுரிந்துள்ளார். இவர் முத்தையாவின் உறவினர். இந்நிகழ்வின்போது அத்தொட்டியை முத்தையாவின் கைத்தடி காசிவிஸ்வநாதன் இயக்கியுள்ளார்.

பிரதமர் மோடி குடிநீர் குழாய் பதிப்பு வேங்கைவயலில் நடந்தபோது அதில் நடைபெறும் ஊழல்களை வேங்கைவயல் மக்களிடம் சண்முகம் அம்பலப்படுத்துகிறார். மேலும் வேங்கைவயல் மக்களுக்கு குடிநீர் முறையாக கொடுக்க வேண்டும் என முத்தையாவிடம் போராடுகிறார்?. "நீ இந்த ஊருக்குத் தலைவரா? நான் தலைவரா? "எனக் கடுப்பாகிய முத்தையா, சண்முகத்தை பணியிலிருந்து நீக்குகிறார். சண்முகம் மீண்டும் அப்பணியைப் பெற அவர் சார்ந்திருக்கும் சங்கம் மூலம் போராடி வருகிறார். அவரது போராட்டத்திற்கு வேங்கைவயல் மக்கள் துணை நிற்கின்றனர். இவை ஒருபுறமிருக்க, கிராம சபைக் கூட்டத்தில் வேங்கைவயல் மக்களுக்கு 2 இலட்சம் குடிநீர் வாங்கியதாக முத்தையா பொய்யாக கணக்கு எழுதி வைத்திருந்ததை எதிர்த்து வேங்கைவயல் மக்கள் கணக்கு கேட்கின்றனர். இவ்விரண்டு நிகழ்வுகளும் முத்தையா குடிநீரில் மலம் கலக்க உடனடிக் காரணமாக

அமைகின்றன. தொலைக்காட்சி செய்திகள், சமூக வலைதளங்கள், வெவ்வேறு சாதி மக்களிடையே கண்ட பேட்டிகள், காவல் துறையின் ஒரு சார்பான விசாரணை தோரணைகள், சுற்றுப் புறச்சாட்சிகள் ஆகியவற்றினை பகுத்தும் தொகுத்தும் ஆராய்ந்தால் குடிநீர்த் தொட்டியில் மலம் கலந்தது ஊராட்சி மன்ற தலைவர் பத்மாவின் கணவர் முத்தையா கும்பல் என்பதை உறுதிபடுத்துகிறது.

**தி.மு.க. அரசின் கபட நாடகம்**

முத்தையா முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்துள்ளார். அடுத்து முத்துக்காடு ஊராட்சி பெண்களுக்கு மாற்றப்பட்டதால் அவரது மனைவியை நிறுத்தி வெற்றி பெறச் செய்துள்ளார். இந்தியா முழுமையிலும் பணம் தான் வெற்றியைத் தீர்மானிக்கிறது என்பதை சொல்ல வேண்டியதில்லை. முத்தையா அ.தி.மு.க.விலும் முத்தரையர் சங்கத்திலும் உள்ளார். முத்தரையர் சங்கம் பாதிக்கப்பட்ட சண்முகத்திற்காக நிற்கவில்லை. ஏனெனில் ஏழைகளுக்காக எந்த சாதிச் சங்கமும் நிற்க முடிவதில்லை.

26.12.2022-க்குப் பிறகு இறையூர், வேங்கைவயலுக்கு உண்மையைக் கண்டறியச் சென்ற எல்லா கட்சிகளுக்கும், எல்லா ஊடகங்களுக்கும், எல்லா சமூக ஆர்வலர்களுக்கும் **உறுதியாக தெரியும் வேங்கைவயல் மக்கள் குடிநீர் தொட்டியில் மலம் கலக்கவில்லை** என்று. ஆனால் திராவிட மாடல் தி.மு.க. அரசும், அதிகாரவர்க்கமும் வேங்கைவயல் மக்களது தலையில் பழியை போடும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் முத்தையாவைவிட மிகக் கொடூரமானர்கள், கேவலமானவர்கள். இவர்கள் தமிழ்நாட்டு மக்களால் தண்டிக்கபட வேண்டும்.

26.12.2022 அன்று மலம் கலந்த குடிநீர் மட்டுமே சேகரிக்கப்பட்டது. பிறகு நான்கு நாட்கள் கழித்து குப்பைத் தொட்டியிலிருந்து எடுக்கப்பட்ட மல மாதிரிகளைத்தான் டி.என்.ஏ சோதனை செய்கிறார்கள். அறிவியல்படி வேங்கைவயல் மக்களை குற்றவாளியாக காட்ட இருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் எதிர்பார்ப்பது மலம் யாருடையது என்பதல்ல? அந்த மலத்தை குடிநீர்த் தொட்டியில் அள்ளிப்போட்டது யார்? என்பதே. அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கருணாநிதிக்கு டாக்டர் பட்டம் வழங்கிய போது அதனை கேலி செய்த மாணவர் இராஜேந்திரன் கருணாநிதியின் காவல் துறையால் கொல்லப்பட்டார். பிறகு அவரது பெற்றோர்களை துன்புறுத்தி தனது மகன் இல்லையென காவல் துறை எழுதி வாங்கிக் கொண்டது. இப்படிப்பட்ட காவல் துறை வேங்கைவயலில் எதையும் செய்யலாம்.

திராவிட மாடல் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இருவரது ஆட்சிக் காலங்களில் பட்டியலின மக்களை காவல் துறை மூலம் தனிமைப் படுத்தி ஒடுக்கியதை (கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை, தீ வைப்பு போன்றவை அடங்கும்) பட்டியலிட்டால் இச்சிறு கட்டுரை போதாது. ஐந்திணை மக்கள் கட்சி சந்திரபோஸ் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு விடுத்த விண்ணப்பத்தில் 1995 முதல் 1997 வரையிலும் 672 தீண்டாமை வன்முறை நடந்ததாக குறிப்பிடுகிறார். இதில் 95 பேர் இறந்துள்ளனர். காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டில் மட்டும் 49 பேர். இதனால் தனியார் மற்றும் பொது சொத்துக்கள் 109 கோடி இழப்பாகும்.

2022 டிசம்பர் 26 ஆம் நாளிலிருந்து வேங்கை வயலுக்குச் சென்ற அதிகார வர்க்கம் இந்நாள் வரை மலம் கலந்தது யார் என்று தெரியவில்லை என்கிறது. அதே நேரத்தில் உலகை ஏமாற்ற பல்வேறு சதித் திட்டங்களை வேங்கைவயலில் நிகழ்த்துகிறது. தமிழ்நாட்டு சட்ட அமைச்சர் மாண்புமிகு ரகுபதி "எல்லோரும் ஒன்னாதான் இருக்காங்க, இங்கு ஒரு பிரச்சனையும் இல்லை, இங்கு தீண்டாமை இருப்பதாக சித்தரிக்கப்படுகிறது" என்கிறார். பொங்கல் நேரத்தில் அவ்வூரில் அரசு சமத்துவப் பொங்கல் வைத்தது. அப்பொங்கலில் பிற்படுத்தப்பட்ட மக்கள் யாரும் பங்கேற்கவில்லை. பட்டிலியன மக்கள் மூன்றுமுறை கோவிலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். மூன்று முறையும் கோவில் கழுவி விடப்பட்டுள்ளது. இதற்காக சட்ட அமைச்சர் வெட்கப்பட வேண்டும்.

**காவல் துறையின் அத்து மீறல்**

2022 டிசம்பர் 26க்குப் பிறகு குடிநீர்த் தொட்டியில் மலம் கலந்தவர்களைக் கண்டு பிடிக்க வேங்கைவயலுக்குச் சென்ற புதுக்கோட்டை காவல் துறையும், சி.பி.சி.ஐ.டி. போலீசும் வேங்கைவயல் மக்களை குற்றவாளியாக காட்டும் முயற்சியில் விடாப்பிடியாக ஈடுபட்டுள்ளனர். பிடித்த முயலுக்கு மூன்று கால் என காட்டவேண்டும். எனவே,

வேங்கைவயல் மக்களிடம் வழக்கை ஏற்றுக் கொள்ளச் சொல்லி ஆசை காட்டுவது, அடித்து உதைப்பது, வேறு வேறு வழிகளில் அச்சுறுத்துவது போன்ற கேடுகெட்ட முறைகளை கையாண்டுள்ளனர். மேலும் அம்மக்களையே **விசாரணை** என்ற பெயரில் வேலைக்கு செல்ல விடாமல் தடுத்து கீழ்படிய வைக்கும் சூழலை ஏற்படுத்தி உள்ளனர். ஆனால் அம்மக்களோ வாச்சாத்தி மக்கள் போல் உறுதியாக நிற்கின்றனர். தமிழ்நாட்டு காவல் துறையில் இச்செயல் எந்த நாகரீக மனிதனையும் வெட்கப்பட வைக்கும்.



**தி.மு.க., பி.ஜே.பி ஆகியவற்றின் கூட்டுச் சதி**

இந்தியாவை 1857 க்கு முன்னால் ஆண்ட கிழக்கிந்தியக் கம்பெனியும், அதன் பிறகு 1947 வரை ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் மக்களிடையே நிலவுகின்ற சாதி, மத, மொழி முரண்பாடுகளை தங்களது ஆதிக்கத்திற்காக கையாண்டது. அதே போன்ற பிரித்தாளும் கொள்கையை இந்திய டெல்லி ஆண்டைகளும் அவர்களது எடுபிடிகளான தி.மு.க., அ.தி.மு.க. அரசுகளும் கையாண்டு வருகின்றன. டெல்லி ஆண்டைகளிடம் விசுவாசம் காட்டுவதில் பெரும் போட்டியே தி.மு.க., அ.தி.மு.க. இடையே நிலவுகிறது. தி.மு.க., அ.தி.மு.க வினர் தங்களது எடுபிடி நிலையை எண்ணி வெட்கப்பட்டதில்லை. அ.தி.மு.க. கொள்ளைக் கும்பல் பி.ஜே.பி. கும்பலிடம் சரணடைந்து விட்டது. தி.மு.க. , பி.ஜே.பி. மோடிக் கும்பலை எதிர்ப்பதாக நாடகமாடுகிறது.

1991 க்குப் பிறகு தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற பெயரில் தொழிற்துறை, வேளாண்துறை, சேவைத்துறை அனைத்தும் உள்நாட்டு பன்னாட்டு பெரும் கார்பரேட் முதலாளிகளுக்கு அடிமாட்டு விலைக்கு விற்கப்படுகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கங்கள் வீதிக்கு வீசப்படுகின்றனர். மேலும் இந்தியாவில் பல்வேறு மொழிகளைப் பேசும் தேசிய இனங்கள் தங்களது அரசு உரிமைக்காக அதாவது இறையாண்மைக்காகப் போராடி வருகின்றன. இச்சிக்கல்களை இந்திய ஆளும் வர்க்கங்கள் ஜனநாயக முறையில் தீர்க்கப்போவதில்லை. ஆகையினால் இவை பெரும் கலவரங்களாக வெடிக்கின்றன. இதனை வடகிழக்கு இந்தியாவில் காணலாம்.



இந்நிலையில் மோடி அரசானது எல்லா ஜனநாயக உரிமைகளையும் காலில் போட்டு மிதித்து உள்நாட்டு, பன்னாட்டு கார்பரேட் முதலாளிகளுக்கே ஆட்சி நடத்துகிறது. அதுவும் குஜராத் வணிக முதலாளிகளான அதானி, அம்பானிகளுக்காகவே ஆட்சி நடத்துகிறது. அமெரிக்க இண்டன்பர்க் அறிக்கை மோடிக் கும்பல் அதானியின் பங்குச் சந்தை திருட்டில் ஈடுபட துணை நின்றதையும், இங்கிலாந்து பி.பி.சி.ஆவணப்படம் மோடியே குஜராத் இஸ்லாமிய இனக்கொலைக்கு திட்டமிட்டு தலைமையேற்று வழிநடத்தியதையும் அம்பலப்படுத்தியது. இதிலிருந்து மக்களது கவனங்களை திசை திருப்பவே வட இந்தியாவில் மதக் கலவரங்களை மோடிக் கும்பல் நடத்துகிறது. தென்னிந்தியாவில் அதற்கான வாய்ப்பின்மையால் சாதிக் கலவரங்களை உருவாக்கத் திட்டமிடுகிறது. இதற்கு எடுபிடி தி.மு.க அரசு துணை போகிறது. தி.மு.க.-வின் திராவிட மாடல், சமூக நீதி, பாசிச எதிர்ப்பு என்பதெல்லாம் ஸ்டாலின் வாய்ச்சவடால் என்பதை வேங்கைவயல் காட்டுகிறது.



**திராவிட மாடல் தி.மு.க. அரசே !**

- வேங்கைவயல் மலம் டி.என்.எ. சோதனை பெயரில் வழக்கை திசை திருப்பாதே !
- தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே சாதி மோதலை உருவாக்காதே !
- நீர்த் தேக்கத் தொட்டியில் மலம் கலந்த முத்தையாவை கைது செய் !
- முத்துக்காடு ஊராட்சி மன்றக் கணக்கை தணிக்கை செய் ! முறைகேடுகளைக் கண்டுபடி !
- பட்டியலின மக்கள் உழுது பயிட்ட சுமார் 23 ஏக்கர் நிலங்களை மீட்டு அம்மக்களுக்கே உரிமையாக்கு ! அவ்வூரிலுள்ள இனாம், பினாமி நிலங்களைக் கைப்பற்றி இறையூரிலுள்ள முத்தரையர், அகமுடையர் ஆகிய ஏழை, கூலி விவசாயிகளுக்கு வழங்கு!
- அய்யனார் கோவிலை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வா ! அதற்கான சட்டமியற்று!

# சிறுகதை

## பிளேக்

சின்னசேவகன்

" டேய், ஒழுங்கா சொல்லிடு ராத்திர வேலையிலே ஏன் குளக்கரை பக்கமா வந்தே.....?"
"தோட்டத்துலே பேசிக்கிட்டிருந்து, திரும்ப நேரமாய்டுச்சா"
"ராஸ்கல்...யானையை யார்டா சுட்டா?.....தந்தம் எங்கேடா?"
"சத்தியமா, சாமி தெரியாதுங்க"

"இப்படிக் கேட்டா சொல்லமாட்டே ஒங்கிட்டே வாங்கிற விதமா வாங்கறேன். கான்ஸ்டபிள் இவனை திருப்பி லாக்-அப்லே தள்ளு" "வெட்டியானை குளக்கரைக்கு வரச்சொல்லு" வார்த்தையை மடமடவென கொட்டிய அதே வேகத்தில் தலையில் காக்கிதொப்பியை சொருகியபடி, மோட்டார் பைக்கில் ஏறிப்பறந்தார் இன்ஸ்பெக்டர். எந்தவித குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்படவில்லை. இரண்டாவது நாளாக லாக்-அப்பில் அடைக்கப்பட்டான் பொம்மன். படிப்பு வாசனையில்லாத அந்த ஆதிவாசியின் தலை அவன் வாழ்க்கையைப் போல வரண்டிருந்தது.



சுற்றிலும் மூங்கில்காடு, அருகருகே புதர்கள் 'பச்சையாக' நடுவே சிறிய குளம். வறண்ட குளத்தின் கரையில், மல்லாக்காக ஒரு யானை, கேட்பாரற்று செத்துக்கிடந்தது. டவுனிலிருந்து வந்த ஒரு மிருக டாக்டர் யானையை சோதித்தார். இன்ஸ்பெக்டர் டயரியில் ஏதோ குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்தார்.

யானையின் வயிற்றுப் பகுதியில் டாக்டர் வரைந்த சாயப்கோட்டைச் சுற்றி சரியாக கோடாரியால் வெட்டியான் யானையைப் பிளந்தான். பிளக்கும்போது வெட்டியானின் நெற்றி வேர்வை யானையின் காலில் விழுந்து கரைந்து காணாமல் போனது.

யானையின் வாய்ப்பகுதியில் கூர்மையான கத்தி விளையாடியிருக்கிறது. இரண்டு பக்கங்களிலும் தந்தங்களைக் காணவில்லை. டாக்டர் கையைக் கழுவி விட்டு, கைத்துணியால் கையைத் துடைத்தபடியே இன்ஸ்பெக்டர் பக்கம் போய் நின்று கொண்டு, மீண்டும் ஒருமுறை யானையைப் பார்த்துவிட்டு, பெருமூச்சுடன் ஆரம்பித்தார்.

இன்ஸ்பெக்டர் சார், எல்லாம் முடிஞ்சாச்சு, நாளைக்கு நான் உங்களுக்கு ரிப்போர்ட் கொடுத்தனுப்புறேன். இந்த நாலு குண்டுகளாலே தான் சுட்டிருக்காங்க..... தந்தத்தை எடுக்க பெரிய கத்தி மாதிரி எதையோ ஒன்று பயன்படுத்தியிருக்காங்க.... சரி நான் கிளம்பறேன்".

●

"சார்...... ரிப்போர்ட்" வந்திடுச்சு, குண்டு பத்தி அதுலேயிருக்கு....... அதான் எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை....."

"இன்ஸ்பெக்டர் , நீங்க புதுசு, அதான் இப்படி பேசறீங்க கவலைப்படாதீங்க, நா கவனிச்சுக்கிறேன்."

"......... சரி சார்" என்று தலையசைத்துவிட்டு பெருமூச்சுடன் நாற்காலியில் சாய்ந்தார் இன்ஸ்பெக்டர்."

"நான் போயிட்டு வறேன். போய் கலெக்டரைப் பார்த்து ஆக வேண்டியதை கவனிக்கிறேன், நான் வரட்டுமா?"

வனத்துறை அதிகாரி வெளியே போனதும், இன்ஸ்பெக்டருக்கு புதிதாக இப்போதே ஸ்கூட்டர் வாங்கிவிட்டது போலிருந்தது, சந்தோஷத்தால் அவர் விரல்கள் மேசையின் மீது தாவின. அதே மேசையில் யானையின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட நான்கு குண்டுகளும் சிதறியிருந்தன. காட்டு இலாகா அதிகாரிகளுக்கு மட்டுமே அரசாங்கத்தால் விநியோகிக்கப்படும் தனிவகைக் குண்டுகள் !

மாலைநேரம். அந்தக் குளக்கரையில் வனத்துறை ரேஞ்சரும், வெட்டியானும் மட்டும் இருந்தார்கள். காற்று சற்று அதிகமாகவே அடித்தது. ரேஞ்சர் கரையோரம் உட்கார்ந்து 'பில்டர்' சிகரெட் ஒன்றை பற்ற வைத்து, புகையை மெதுவாக, நெஞ்சுவரை இழுத்து, சில வினாடிகள் உள்ளேயே வைத்து பின் மங்கலாக வெளியே கக்கிக் கொண்டிருந்தார். வெட்டியான், செத்த யானையின்மீது ஒரு டின் கெரோசினை ஊற்றி, தீக்குச்சியால், பத்தவைத்து விட்டு, பத்துப் பதினைந்தடி தள்ளி குளிர் காய்ந்து கொண்டிருந்தான். அரைமணி நேரம் கழித்து ரேஞ்சர் எழுந்து வந்து வெட்டியானைக் கூப்பிட்டு ஒரு இருபது ரூபா நோட்டை கொடுத்துப் போகச் சொல்லிவிட்டு, அவரும் பின்னாலேயே கிளம்பினார். 'சலாம்' போட்டு ரேஞ்சர் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு 'குடுகுடு' என்று காட்டுப் பகுதியை விட்டு வெளியேறி கடைத்தெரு பக்கம் போனான். வெட்டியானுக்கு ஒரே குஷி! தனக்கு இன்று நல்ல 'சுளி' என்று நினைத்து கொண்டே மளிகைக் கடையினுள் நுழைந்தான்.

வெட்டியானுக்கு மட்டும் 'சுளி' யில்லை, அவன் பெண்சாதி, குழந்தைங்க..... மொத்தத்துலே அந்த சின்ன மலைவாசி குடும்பத்துக்கே இன்னிக்கி 'சுளி' தான். எல்லாரும் அரிசி கஞ்சி குடிச்சாங்க.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, லட்சத்திற்கும் மேல் மதிப்புள்ள யானைத் தந்தங்களை சுமந்து சென்ற வனத்துறை ஜீப், கடைசிப் போஸ்ட்டை தாண்டியது. புழுதியை கிளப்பிச் சென்ற இந்த ஜீப் வழிவிட்டு சரணாலய பகுதியில் நுழைந்தது. நகரத்திலிருந்து காலை தினசரிகளை சுமந்து வரும் பஸ். இன்று அது சுமந்துவந்ததில் மூன்றாவது பக்கதில் ஒரு ஓரத்தில் ஒரு துண்டுச் செய்தி....

இரண்டு நாட்களுக்கு முன் ஒரு யானை பிளேக் நோய் தாக்கப்பட்டு இறந்தது. நேற்று அது அடக்கம் செய்யப்பட்டது. மேலும் பிளேக் நோய் பரவும் அபாயம் இருப்பதால், சரணாலய பகுதியைச் சார்ந்த ஆதிவாசிகளும், கிராமப்புறமக்களும் காட்டுப்பகுதியினுள் நுழைய வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்" மாவட்ட ஆட்சியாளர் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி அளித்திருந்தார்.

●

# சங்க காலத்தில் முசிறி

**-மனோஜ்**

முசிறி என்னும் ஊர் சேரநாட்டின் துறைமுகம். சங்ககாலத்தில் அரபிக்கடலின் கடற்கரையில் இருந்தது. கி.பி.முதல் நூற்றாண்டில் இந்தியாவுக்கு பெரிப்ளஸ் குறிப்பு பத்தி 54-ல் இது முசிறிஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



கிரேக்க, ரோமானிய மக்களைத் தமிழ் நூல்கள் யவனர் எனக்குறிப்பிடுகின்றன. இவர்கள் கலம் என்னும் கப்பலில் பொன்னோடு வந்து மிளகோடு மீளும் வாணிகம் செய்தனர். முசிறித் துறைமுகத்தில் கடலோடு கலக்கும் ஆறு சுள்ளியம் பேரியாறு. இது இக்காலத்தில் பெரியாறு என வழங்கப்படுகிறது. இந்த ஆற்றின் வழியாக உள்நாட்டுக்கு கூட கலம் செல்லுமாம். பாண்டிய அரசன் அடுபோர்ச் செழியன் இந்த முசிறியை முற்றுகையிட்டு அங்கு வந்த அழகிய படிமப் பொருட்களைக் கைபற்றிச் சென்றானாம். இது புலவர் எருக்காட்டூர் காயங்கண்ணனார் தரும் செய்தி.

பொலந்தார்க் குட்டுவன் முசிறியின் அரசன். அவ்வூர் மக்கள் அம்பியில் மீனை ஏற்றிச் சென்று பண்டமாற்றாக நெல்லை வாங்கி வருவர். அவற்றில் மிளகு மூட்டைகள் விற்பனைக்கு வரும். கலம் என்னும் கப்பலில் வந்த பொற்குவியல்களை உப்பங்கழித் தோணியால் கரைக்கு கொண்டுவருவர். அங்கு குவிந்துகிடக்கும் கடல் வளப்பொருட்களையும் அவ்வூர் அரசன் குட்டுவன் வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்குவான். சங்ககால புலவர் பரணர் இதனைக் குறிப்பிடுகிறார்.

இன்று 'முசிறிஸ்' அகழ்வாராய்ச்சி வலதுசாரி கோபத்தை எதிர்கொள்கிறது. 2015 ஆம் ஆண்டு செப்டம்பரில் KCHR இன் உரிமத்தை ASI சஸ்பெண்ட் செய்ததையடுத்து பட்டணத்தில் அகழ்வாராய்ச்சி வேலை நிறுத்தப்பட்டது. இது RSS துணை அமைப்பான பாரதிய விசார கேந்திரத்தின் புகாரால் தூண்டப்பட்டது.

ஒரு தசாப்தத்திற்கு முன்பு, பட்டணம் கொச்சிக்கு வடக்கே 30 கி.மீ தொலைவில் ஒரு அமைதியான, விவரிக்கப்படாத கிராமமாக இருந்தது. இன்றும், அதன் குறுகிய பாதைகள் கிராமப்புற வீடுகளைக் கடந்து செல்கின்றன. கடல் எப்போதும் தென்னை மரங்களின் அடுத்த கொத்துக்களை கடந்தது போல் உணர்கிறது. ஆனால் பல ஆண்டுகளாக, மணலில் மற்றும் சலசலக்கும் உள்ளூர் குழந்தைகள் பழைய கண்ணாடி மணிகள் மற்றும் பழங்கால சந்திப்புகளை சுட்டிக்காட்டும் பானை துண்டுகளை கண்டு பிடித்தனர். கிராமத்தின் பெயரும் அதன் ரகசியத்தை விட்டுச்சென்ற இந்த வார்த்தையின் தோற்றம் பிராகிருதத்தில் உள்ளது. அதில் இது ஒரு படகு அல்லது துறைமுகம் என்று பொருள்படும். உள்ளூர் 'பானை' ஓடுகள் கேரளாவில் உள்ள பட்டணம் அகழ்வாராய்ச்சி தளத்தில் பெயரிடப்பட்டு சேமிக்கப்படுகின்றன.

2007 ஆம் ஆண்டில், கேரள வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில் (KCHR), மாநில அரசாங்காத்தால் ஆதரிக்கப்படும் ஒரு தன்னாட்சி அமைப்பானது, கிராமத்தில் தோண்டத் தொடங்கியது. உடனடியாக அவர்களின் கண்டுபிடிப்புகளின் செழுமையால் தாக்கப்பட்டது. 80 ஆண்டுகளில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழு 1.29 லட்சத்திற்கும் அதிகமான தொல்பொருட்களை கண்டுபிடித்தது. சில இரும்பு வயது (பொது சகாப்தத்திற்கு 1000 முதல்

500 ஆண்டுகள் வரை) மற்றும் ரோமானியத்தின் உச்சத்தில் மத்திய தரைக்கடல் மற்றும் அரேபிய தீபகற்பத்துடன் வர்த்தகம் செய்ததற்கான ஆதாரங்களை அளித்தது.

ஆனால் செப்டம்பர் 2015 இல் இந்திய தொல்லியதுறையானது. பட்டணத்தில் அகழ்வாராய்ச்சி செய்வதற்காக **KCHR** இன் உரிமத்தை ரத்து செய்து, அதுவரை செய்த பணிகள் குறித்து விசாரணையைத் தொடங்கியது.

**RSS**-இன் துணை அமைப்பான பாரதிய விசார கேந்திரத்தின் புகாரின் காரணமாக நாட்டில் எந்தவொரு அகழ்வாராய்ச்சிக்கும் சம்மதம் கட்டாயம் என்ற '**ASI**' அதன் விசாரணையை முடித்து, அந்த இடத்தில் தோண்டுவதற்கான அமைப்பின் உரிமத்தை புதுப்பித்தது. ஆனால் அதற்குள், நிதிகள் தீர்ந்து விட்டன. மேலும் ஆராய்ச்சி கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டது. தொடக்கத்திலிருந்தே அகழ்வாராய்ச்சிகளை வழிநடத்திய **KCHR** இன் இயக்குனர் PJ செரியன் 2016-இல் ஓய்வு பெற்ற பிறகு இந்த திட்டம் இப்போது நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர் கொள்கிறது.

தொடக்கத்திலிருந்து, உதவிக்காக வெகு தொலைவில் பார்க்க வேண்டும் என்று KCHR இன் இயக்குனர் PJ செரியன் மற்றும் அவரின் குழு உணர்ந்தது. "தொல் பொருள் ஆராய்ச்சி இரண்டு அடிப்படை அம்சங்களை கொண்டுள்ளது. இது இடைநிலை மற்றும் ஒத்துழைப்புடன் இருக்க வேண்டும்" என்று PJ செரியன் கூறினார். KCHR லண்டனில் உள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகம் பெய்ஜிங்கில் உள்ள அரண்மனை அருங்காட்சியகம் மற்றும் ஆக்ஸ்போர்டு மற்றும் ரோம் பல்கலைக்கழகங்களைக் தவிர, நாட்டில் உள்ள பல நிறுவனங்களிடமிருந்தும் நிபுணர்களையும் பயிற்சியையும் நாடியது. அதன் உரிமம் இடைநிறுத்தப்பட்டபோது, பட்டணம் தளத்தில் ஒரு ஆய்வகத்தை அமைக்க அரண்மனை அருகாட்சியகத்து KCHR ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

**சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க**
**யவனர் தந்த வினைமான் நன்கலம்**
**பொன்னோடு வந்து கறியோடு பெயரும்**
**வளங்கெழு முசிறி ஆர்ப்பெழ வளைஇ**
**அருஞ்சமங் கடந்து படிமம் வவ்விய**
**நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்**

-அகநானூறு 149

கறி – மிளகு

●

தொடர் - 4




# மாநிலங்களும் ஒன்றியமும்

**-முத்துமுருகன்**

அமெரிக்காவில் இராகுல் காந்தியின் உரையும் பார்வையாளர்களின் கேள்விகளும் இராகுல்லின் பதில்களும் சமூக ஊடகங்களில் வலம் வருகின்றன. இதில் தமிழர் எழுப்பிய கேள்வியின் சாரம் United Nations of India வாக இருக்க வேண்டும் எனும் அவா இருந்தது. அதாவது இத்துனணக் கண்டம் ஐரோப்பா போல் உள்ளது, ஆனால் இங்கு தற்போது ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி என்ற போக்கில் ஒன்றிய அரசு செயல்படுவதாக இருக்கின்றது என்று கேள்வியின் போக்கு அமைந்தது. இதற்கு இராகுலின் பதில் இந்திய அரசியல் அமைப்பில் Union of states என்று இருக்கின்றது. அனைத்து மொழிகளுக்கும் அவர்களின் பண்பாடு, வரலாறு, மொழி பாதுகாக்கப்படும் என்று உள்ளது என்ற பதிலுடன் தமிழ் மீது கூடுதல் கவனத்துடன் அவரது பதில் அமைந்தது.

விடுதலைக்கு முன்னும் பின்னும் காங்கிரசு அரசியல் இயக்கம் தான் மட்டுமே ஒட்டு மொத்த இந்தியாவின் பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்ற பிடிவாதமுடன் அரசியலில் இதன் நடவடிக்கைகளும் விளங்கியதே வரலாறு. இது இத்துணைக் கண்டத்தை இது நாள் வரை தீராத தலைவலியுடன் இருந்து வருவதற்கு காரணமாகி இரண்டு நாடுகள் உதயமாக இரண்டிலும் தேசிய இனங்கள் உரிமைகளற்ற மாநிலங்களாக காட்சியளிக்கின்றதே?. இதை உணர்ந்து கொள்ள இன்றைய BJPயின் நடவடிக்கை மாநில அரசியல் அமைப்புகளை சற்று விழிக்கச் செய்ததுடன் வெளிநாட்டில் வசிக்கும் இந்திய மக்களில் அரசியல் கேள்விகளை எழுப்பியுள்ளது. அமெரிக்க உரையரங்கத்தில் கேள்விகளாக எழுந்தள்ளது. ஆனால் காங்கிரசு மரபில் வந்த இராகுல் காந்தி பதில் மழுப்பலாக உள்ளது.

மாநிலங்களுக்கான (தேசிய இனங்களுக்கான) அதிகாரமே இங்கு கேள்வியின் உள்ளடக்கமாக உள்ளபோது அரசியல் அமைப்பைக்காட்டி தப்பித்து கொள்கிறார் இராகுல். ஆனால் அரசியல் நிர்ணய சபையின் வரலாற்றைப் பார்க்கும் போது கடும் விவாதங்களும் அதிகார பரவல்களுக்கான உந்துதலும் இருந்த போது ஒன்றிய அரசிலே அனைத்து அதிகாரங்களையும் குவித்த கொண்டுள்ளது இன்றைய அரசியலமைப்பு. உச்சமாக ஒரு மாநிலத்தை இல்லாமல் செய்யுமளவு அதிகாரம் உள்ளது என்பதை காஷ்மீரம் விசயத்தில் தற்போதைய ஒன்றிய அரசு நிலை நிருத்தியுள்ளது. அதுமட்டுமா ! டெல்லி அரசு விவாகரத்தில் உச்சநீதி மன்றம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே அதிகாரம் என்று கூறிய பின்பும் அவசர சட்ட மூலம் தனது அதிகார வரம்பை நீட்டும் பொழுதும் இதே இந்திய அரசியலமைப்பில் கூட்டாசிக்கு இடமுள்ளது என்பதை எந்த குடிமகனும் நம்ப மறுப்பான். காங்கிரசின் இந்திய தேசியமும் BJP யின் இந்துத்துவமும் உள்ளடக்கதில் அனைத்து தேசிய இனங்களின் சுயாட்சித் தன்மையை மறுப்பதே.

இந்நிலையில் அனைத்து எதிர்கட்சிகளும் காங்கிரசு உட்பட BJP யை எதிர்த்து ஒர் அணியில் கூடும் பொழுது தங்கள் மாநில உரிமைக்கு அச்சுறுத்தலாக BJP விளங்கி வருவதையே காட்டும் அதனது சர்வாதிகாரப் போகினை வெளிப்படுத்தும். ஆனால் அதமட்டும் போதாது. இந்திய அரசியலமைப்பு மாநிலங்களின் உரிமைகளை ஆங்கிலேயன் 1935ல் தனது நோக்கங்களுக்கு இசைந்தவாறு வடிவமைத்தான். இதையே இன்றைய அரசியல் அமைப்பு கொண்டுள்ளது. இதைமாற்ற எதிர்கட்சிகள் ஒன்றினையும் நடவடிக்கையில் பொது திட்டமாக கொள்ள வேண்டும், இதை காங்கிரசு ஏற்காது. இராகுல் முனைப்புடன் செயல்பட்டாலே அவர் ஒரு ஜனநாயக வாதி இல்லையேல் இவரும் வாயல் வடை சுடுபவரே.

எந்த ஒரு மொழியும் தனிப்பட்ட நபரால் காப்பாற்ற முடியாது. அது அதன் சமூக இயக்கப் போக்கில் அம்மக்களால் மட்டுமே காப்பாற்ற முடியும். ஏனென்றால் அவை அம்மக்கள் சமூகங்களால் வளர்த்தெடுக்கப் பட்டவையே வரலாறு. ஆக இவற்றை காக்க வளர்த்தெடுக்க அதிகாரங்கள் தேவை. அவற்றை ஒன்றிய அரசிடம் அடகு வைக்கும் இந்திய அரசியல் அமைப்பில் இருபதாக காட்டுவது அயோகியத்தனத்தின் உச்சகட்டம். அரசியல் சிந்தனைகளில் முற்போக்குடன் இணைந்து எதிர்கட்சிகளின் கடமையாக மாநிலங்களின் தன்னாட்சி உரிமையே ஒரு குறைந்த பட்ச திட்டமாக

முன் வைப்பது இவர்களின் கடமை. அப்போதான் இந்திய துணைக்கண்டம் அனைத்து தேசிய இனங்களின் கூட்டமைப்பாகும்.

●

## இனவழிப்புக்கு ஆளான ஈழத் தமிழ் மக்களின் நீதிப் போராட்டம்

-தோழர் தியாகு

### இந்திய வல்லரசின் 13 பத விளையாட்டு

தமிழினத்தின் கூட்டு உளச் சான்றில் மாறா வடுவாகப் பதிந்து விட்ட முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவேந்தும் இந்நேரத்தில் இதை எழுதுகிறேன். முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்குப் பிறகான இந்த பதினான்கு ஆண்டுகளில் தமிழீழத் தாயகமும் தமிழ்நாடும் புலம்பெயர் தமிழ்ச் சமூகமும் நீதிக்கான போராட்டத்தில் ஈட்டியுள்ள வெற்றிகளையும் அடைந்துள்ள தோல்விகளையும் கணக்கிட்டு அடுத்தடுத்த பணிகளுக்குத் திட்டமிட வேண்டியுள்ளது.



ஈழத் தமிழர்களும் சரி, இந்தியத் தமிழர்களும் சரி, நீதிக்கான போராட்டத்தின் முடிவைத் தீர்மானிப்பதில் இந்தியா ஒரு முகன்மைக் காரணி என்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

"நாங்கள் இந்தியாவைத்தான் நம்பியிருக்கின்றோம்" என்று சில ஈழத் தமிழர்கள் தொடர்ந்து சொல்லி வருகின்றனர்.

"புவிசார் அரசியல் நோக்கில் சீனத்தை எதிர்க்க இந்தியா ஈழத் தமிழ் மக்களை ஆதரிக்க வேண்டும்" என்றும் சொல்லப்படுகிறது. இவ்வகையில் இந்தியாவுக்கு அயலுறவுக் கொள்கை பற்றிப் பாடம் எடுப்போரும் உள்ளனர்.

நரேந்திர மோதி தலைமையிலான இந்திய அரசு இந்துமதச் சார்புடையதாக இருப்பதால், ஈழத் தமிழர்கள் பெரும்பாலும் இந்துக்கள் என்பதை மனத்திற்கொண்டு அவர்களுக்கு ஆதரவு தரும் என்று எதிர்பார்த்து மோதியின் மனங்குளிரப் பேசுவோரும் உள்ளனர்.

இந்திய வல்லரசைப் பொறுத்த வரை தமிழர்களின் இந்த நம்பிக்கைகளைத் தனது புவிசார் அரசியலுக்கு மூல முதலாகப் பயன்படுத்திக் கொள்வதில் குறியாக உள்ளது. இலங்கை என்னும் சதுரங்கப் பலகையில் தமிழ்த் தலைவர்களைப் பகடைகளாக நகர்த்தி வருகிறது.

சென்ற ஆண்டு ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் சார்பில் கோரிக்கை மாநாடு நடத்தி, இனவழிப்புக்கு நீதி காணும் போராட்டத்தில் இந்திய அரசு செய்ய வேண்டியது என்ன? தமிழக அரசு செய்ய வேண்டியது என்ன? தமிழக மக்கள் செய்ய வேண்டியது என்ன? என்பதையெல்லாம் தெளிவான தீர்மானங்களாக வரையறுத்தோம்.

அடுத்த சில நாளில் நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் போன்ற ஈழ ஆதரவுப் பாரம்பரியம் கொண்ட தலைவர்கள் முள்ளிவாய்க்கால் சுடரேந்தும் நிகழ்ச்சியில் பாசக

மாநிலத் தலைவர் அண்ணாமலையுடன் கலந்து கொண்டு நரேந்திர மோதிக்கும் அண்ணாமலைக்கும் பாராட்டுத் தெரிவித்தார்கள். இதை வன்மையாக எதிர்த்த நான் "மோதிக்கு முதுகு சொறிந்தால் தமிழீழம் மலர்ந்து விடாது" என்று ஒரு செவ்வியில் சொல்லியிருந்தேன்.

இந்துத்துவ ஆற்றல்களோடு கூடிக் குலாவி ஈழத்துக்கு ஏதாவது (?) செய்ய முடியும் என்ற கருத்தைப் பரப்பி வரும் காசி ஆனந்தனைக் காவி ஆனந்தன் என்றே தமிழீழ ஆதரவு முற்போக்காளர்கள் கேலி செய்து வருகின்றனர். அவரும் "அது பற்றிக் கவலை இல்லை, நான் அப்படியே இருந்து விட்டுப் போகிறேன்." என்று கூறி விட்டார். இந்துத்துவ ஆளும் கும்பலை நயந்து கொள்ளும் பொருட்டு அவரும், அவரைப் போலவே காந்தளகம் சச்சிதானந்தன் போன்றவர்களும் இஸ்லாமிய வெறுப்பைக் கக்கி வருகின்றனர்.

இந்தியாவின் அண்டை நாடுகளையும் சேர்த்து அகண்ட பாரதம் அமைப்பது ஆர்.எஸ்.எஸ்-பாசக திட்டம். இந்தியாவில் போலவே இலங்கை, மியான்மர் போன்ற அண்டை நாடுகளிலும் அது இஸ்லாமியரை நசுக்கத் திட்டமிடுகிறது. அதற்குக் காசி அனந்தன் போன்றவர்களுக்கு "ஈழ" ஆசை காட்டி இந்துத் தமிழர்களின் ஆதரவைத் திரட்ட முயல்கிறது. பாசக ஆதரவோடு தமிழீழம் அமையும் எனக் கொண்டாலும் அது காவித் தமிழீழமாகவே இருக்கும். இந்தப் பின்னணியில் தான் நான் சொன்னேன்: "தமிழீழம் மலரும் அது காவித் தமிழீழமாக இருக்காது. சிவப்புத் தமிழீழமாகவே இருக்கும்."

முள்ளிவாய்க்கால் சுடரேந்தும் அந்த நிகழ்ச்சியில் அண்ணாமலை என்ன பேசினார் தெரியுமா? "2009 இல் நரேந்திர மோதி பிரதமராக இருந்திருந்தால் இது (முள்ளிவாய்க்கால் கொடுமை) நிகந்திருக்காது".

மோதி அப்போது இந்தியத் தலைமையமைச்சராக இல்லை. ஆனால் குசாராத் முதலமைச்சராக இருந்தார். முதலமைச்சராக அவர் முள்ளிவாய்க்கல் இனவழிப்பைக் கண்டித்து அறிக்கை விட்டாரா?

அவர் சார்ந்த பாரதிய சனதா கட்சி முள்ளிவாய்க்கால் இனக்கொலையைக் கண்டித்ததா? அப்போதைய காங்கிரஸ் அரசு சிறிலங்காவின் சிங்கள அரசுக்கு ஆய்தங்களும் ஆதரவும் வழங்கியதை எதிர்க்கட்சியான பாசக கண்டித்ததா?

2009 தொடங்கி இன்று வரை ஐநா மனிதவுரிமைப் பேரவையில் இந்திய அரசு கடைப்பிடிக்கும் ஏமாற்று அணுகு முறையில் - தமிழ் மக்களின் ஈடுசெய் நீதிக்கோரிக்கையை மறுக்கும் அணுகு முறையில் - மன்மோகன் சிங்குக்கும் நரேந்திர மோதிக்கும் என்ன வேறுபாடு? தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு பொதுவாக்கெடுப்பு ஆகிய பொதுவான தமிழர் கோரிக்கைகளை மறுப்பதில் காங்கிரசுக்கு பாசக-வுக்கும் என்ன வேறுபாடு? 13 ஆம் திருத்தச் சட்டம் என்னும் கதைக்குதவாத திட்டத்தைத் தமிழர்கள் மீது திணிக்க முற்படுவதில் முந்தைய அரசுக்கும் இன்றைய அரசுக்கும் என்ன வேறுபாடு?

2013 ஆம் ஆண்டு அக்டோபரில் கொழும்பில் நடைபெறவிருந்த பொது நலவாய (காமன்வெல்த்) உச்சி மாநாட்டுக்கு இந்தியத் தலைமையமைச்சர் செல்லக்கூடாது எனக் கோரி காலவரையற்ற பட்டினிப் போர் தொடுத்தேன். தமிழ்நாட்டில் திமுக உள்ளிட்ட எல்லாக் கட்சிகளும் எமது போராட்டத்தை ஆதரித்த போது கொழும்பு மாநாட்டை மன்மோகன் சிங் புறக்கணிக்கக் கூடாது என்று அறிக்கை விட்டவர் பாசக அனைத்திந்தியத் தலைவர்.

ஒரு கேள்விக்கு அண்ணாமலை விடை சொல்லட்டும் :

2009 முள்ளிவாய்க்காலில் நடந்ததை மோதியால் தடுத்திருக்க முடியுமா ? என்ற இறந்த காலம் தொடர்பான வினா கிடக்கட்டும். அன்று நடந்தது இனக்கொலை தான் என்பதை இப்போதாவது மோதியும் அண்ணாமலையும் அறிந்தேற்பார்களா? இன்றைய பன்னாட்டரங்கில் ஓர் அரசு ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதை ஆதரிப்பதாக இருந்தால் அதற்கான முதல் படியே தமிழினவழிப்பை அறிந்தேற்பதுதான் அங்கீகரிப்பதுதான்.

ஆனால் அண்ணாமலை அந்தக் கூட்டத்திலேயே சொல்கிறார் : என்னால் சில சொற்களை உச்சரிக்க முடியாது என்று. இனவழிப்பு என்று தன் வாயால் சொல்ல முடியாதவரை ஏன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அழைக்க வேண்டும்? அவர் ஏன்

அங்கு வந்து சுடர் ஏற்ற வேண்டும்? தமிழ்த் தலைவர்கள் அவரையும் அவரின் தலைவரையும் ஏன் ஏன் பாராட்ட வேண்டும் ? தமிழீழ மக்கள் இனவழிப்புக்கு ஆளானவர்கள், இன்றளவும் கட்டமைப்பியல் இனவழிப்புக்கு ஆளாகிக் கொண்டிருப்பவர்கள். அவர்களின் இன்றைய போராட்டம் ஈடுசெய் நீதிக்கான போராட்டம். இனவழிப்புக் குற்றம் புரிந்த சிங்கள அரசியல் தலைவர்களும், படைத் தலைவர்களும் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்றப்பட வேண்டும். ஆனால் இது மட்டும் போதாது. இறுதி நோக்கில் இனவழிப்பு என்பது சிறிலங்கா எனப்படும் சிங்களப் பேரினவாத அரசின் குற்றம். சிறிலங்கா கலைக்கப்படுவதே முறையான அரசியல் நீதியாக நிறைவுபெறும்.

தமிழீழ மக்கள் ஒரு தேசம் என்ற வகையில் இயல்பிலேயே இறைமைக்கு உரிமை படைத்தவர்கள். இனவழிப்புக்கு ஆளான மக்கள் என்ற வகையில் இறைமைக்கான சிறப்புரிமையும் அவர்களைச் சாரும். யூதர்கள் ஒரு தேசமாக மாட்டார்கள் என்றாலும் இரண்டாம் உலகப் போருக்கு முன்னும் போர்க் காலத்திலும் பாரிய இனவழிப்பு ஆளானவர்கள் என்பதால் அவர்கள் தனியரசு அமைத்துக் கொள்ளும் உரிமையை ஏற்று இசுரேல் அமைத்துத் தரப்பட்டது. இசுரேல் அந்த இறைமையைப் பாலத்தீனர்களுக்கும் பிற அராபியர்களுக்கும் எதிராகப் பயன்படுத்தி வருகிறது.

தமிழீழத்தை இசுரேலுடன் ஒப்பிட்டு, அமெரிக்க வல்லரசுக்கு இசுரேல் போல் இந்திய வல்லரசுக்கு ஈழம் பயன்படும் என்று சொல்லக் கூடியவர்கள் இப்போதும் இருக்கின்றார்கள். அப்படித்தான் ஈழம் பயன்படும் என்றால் இந்தியாவில் ஓர் ஒடுக்குண்ட தேசம் என்ற வகையில் தமிழர்களாகிய நாம் அதை ஏன் ஆதரிக்க வேண்டும்? என்ற கேள்வி எழத்தான் செய்யும். விடுதலை பெற்ற தமிழீழம் ஒரு போதும் இந்தியாவுக்கோ, வேறு வல்லரசுக்கோ அடியாளாக இருக்காது, அது முற்போக்கான கொள்கைகளைக் கடைப்பிடித்துக் குறிப்பாகத் தெற்காசியாவில் பிற தேசங்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக அமையும் என்பதற்கு 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானமும், 'சோசலித் தமிழீழம்' என்ற விடுதலைப் புலிகளின் வேலைத்திட்டமும், நாடு கடந்த தமிழீழ அரசாங்க முன் முயற்சியில் பறை சாற்றப்பட்டுள்ள விடுமைப் பட்டயமும் சான்று பகர்கின்றன. இப்படியொரு தேசம் மலர்வதை அமெரிக்க, இந்திய, சீன, வல்லரசுகள் விரும்பவில்லை என்பதே உண்மை. ஆனால் வல்லரசுகளின் விருப்பமே வரலாற்றைத் தீர்மானித்து விடுவதில்லை.

ஈழம் இந்தியாவின் எந்த நியாயமான நலனுக்கும் எதிரானதல்ல. இந்தியா ஈழத்தை எதிர்க்கவும், நீதிக்கான ஈழத் தமிழர் பேராட்டத்தை மறுக்கவும், நியாயமான காரணம் ஏதுமில்லை. நீதிக்கான போராட்டத்தில் இந்தியா தமிழ் மக்களுக்கு உதவ விரும்பினால் அவர்களின் மூன்று முதன்மைக் கோரிக்கைகளை ஆதரிக்க வேண்டும்.

1. ஈழத் தமிழருக்கு எதிராக இனவழிப்புப் போர் நடந்துள்ளது என்பதை அறிந்தேற்று, இனவழிப்பு, போர்குற்றம், மனிதகுலத்துக்கு எதிரான குற்றம் ஆகிய பன்னாட்டுக் குற்றம் இழைத்தவர்களை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்ற ஆதரவளிக்க வேண்டும்.

2. இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போர் தொடர்பான பொறுப்புக் கூறல் என்ற வகையில் வந்துள்ள ஐநா அறிக்கைகளின் தொடர்ச்சியாகத் தற்சார்பான பன்னாட்டுக் குற்றப்புலனாய்வு செய்ய ஆதரவளிக்க வேண்டும்.

3. தமிழீழத்தின் வருங்காலம் குறித்துத் தீர்மானிக்கத் தாயகத்திலும் புலம் பெயர் தமிழுலகிலும் ஈழத் தமிழர்களிடையே ஐநா மேற்பார்வையில் பொதுவாக்கெடுப்பு நடத்த ஆதரவளிக்க வேண்டும்.

இந்தப் பொதுவான கோரிக்கைகளை ஆதரிக்காமல் 13ம் திருத்தச் சட்டம் என்ற பாட்டையே இந்தியா திரும்பத் திரும்பப் பாடி வருகிறது. இது தவிர வேறு எதுவும் தமிழர்களின் கோரிக்கைகளாக இருக்க கூடாது எனவும் வலியுறுத்தி வருகிறது.

13ஆம் திருத்தச் சட்டம் ஈழத் தமிழர்களின் தேசியச் சிக்கலுக்கு அரசியல் தீர்வாக முடியுமா? இலங்கை அரசவையில் 13ஆம் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டு 36 ஆண்டுக்

காலமாயிற்று. இந்த 36 ஆண்டுகளில் அதனால் விளைந்த பயன் என்ன? அது தீர்வாகவில்லை என்பது மட்டுமன்று, தீர்வை நோக்கிய பயணத்தில் ஓரங்குலம் கூட முன்னேறவில்லை என்னும் போது 13ஆம் திருத்தச் சட்டம் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குப் போய்விட்டது என்று பொருள்.

36 ஆண்டுகளுக்கு முன் இராசீவ்-செயவர்த்தனா உடன்படிக்கையின் தொடர்ச்சியான 13ம் திருத்தச் சட்டம் முன்மொழியப்பட்ட நேரத்தில் அன்றைய இந்திய பிரதமர் இராசீவ் காந்திக்கு ஈழத் தேசிய அரசியல் கட்சிகள் எழுதிய கடிதத்தில் 13ம் திருத்தச் சட்டத்தை கேலிக் கூத்து என்று சாடின.




13ஆம் திருத்தச் சட்டம் குறித்து ஏமாற்றம் தெரிவிக்கும் வகையில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம், செயலாளர் அமிர்தலிங்கம், துணைத்தலைவர் சம்பந்தன் ஆகிய மூவரும் இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ் காந்திக்கு 1987 அக்டோபர் 28ஆம் நாள் எழுதிய கடிதம் ஒரு வரலாற்று ஆவணம். இந்தக் கடிதத்தில் அவர்கள் தெளிவாகக் கூறினார்கள்.

"இந்த முன்மொழிவுகள் தமிழ் மக்களின் வேணவாக்களை நிறைவு செய்யவில்லை. தமிழ் மக்கள் சந்தித்துள்ள உயிரிழப்பு, இன்னல்கள், துயரங்களுக்கு எவ்விதத்தும் ஈடாகவும் இல்லை".

சுருங்கச் சொல்லின் 13ஆம் திருத்தச் சட்டம் ஒரு கேலிக்கூத்து! ஒரு மோசடி! இந்தக் கேலிக் கூத்தைத்தான் இந்த மோசடியைத் தான் இப்போது முழுமையாகச் செயலாக்கச் சொல்லித் தமிழ் அரசியல் தலைவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு சிங்கள அரசிடம் பேரம் பேசுகின்றது இந்திய வல்லரசு.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படி வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாணம் அமைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் கூட இந்திய அரசிடமிருந்து வரவில்லையே, ஏன்? ஒரு பன்னாட்டு ஒப்பந்தத்தின் படி வலியுறுத்த வேண்டிய கோரிக்கையை வாய்மொழியாகக் கூட பேசாமல் மோசடியான 13 ஆம் திருத்தச் சட்டத்தை ஈழத் தமிழர்கள் தலையில் கட்ட முயலும் இந்திய அரசின் உள்நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த 13 ஆம் திருத்தச் சட்டம் எவ்வகையிலும் தமிழர்களின் தேசிய இனச் சிக்கலுக்குத் தீர்வாகாது என்பது மட்டுமல்ல, சிங்களத்தில் கட்டமைப்பியல் இனவழிப்புக்குத் துணை செய்வதாகவும் அமையும் என்பது ஆய்ந்து தெளிந்த முடிவாகும்.

ஈழச் தமிழர் தொடர்பான இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு 13 ஆவது திருத்தச் சட்டம் தான் என்பதால் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று சொல்லக்கூடிய தமிழ்த் தலைவர்களும் உள்ளனர், ஆய்வு அறிஞர்களும் உள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்ட ஈழத் தமிழர் இனவழிப்பு குறித்து இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு என்ன ? இனவழிப்புக்கு ஈடுசெய் நீதி கோரும் தமிழர் போராட்டம் குறித்து இந்தியாவின் கொள்ளை நிலைப்பாடு என்ன? உள்நாட்டுப் போரின் இறுதிக்

கட்டங்களில் போர்க் குற்றங்களும் மானிட விரோதக் குற்றங்களும் நிகழ்துள்ளன என்ற நம்பகமான குற்றச்சாட்டுகளை எடுத்துரைக்கும் மூன்று ஐநா அறிக்கைகள் (தாருஸ்மன் சார்லஸ் பெற்றி, மனிதரிமை ஆணையர் அலுவலகத்தின் (OISL) அறிக்கை) குறித்து இந்தியாவின் கொள்ளை நிலைப்பாடு என்ன? இந்தக் குற்றச்சாட்டுகள் மீது புலனாய்வு செய்ய உள்நாட்டுப் பொறிமுறையா? பன்னாட்டு பொறிமுறையா? கலப்புப் பொறிமுறையா? என்ற வினாவில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு என்ன ?

ஐநா மாந்தவுரிமைப் பேரவையில் 2015 ஆம் ஆண்டு இலங்கையும் இந்தியாவும் உள்ளிட்ட கூட்டு முன்மொழிவில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட 30/1 திர்மானம் குறித்தும் அதிலிருந்து சிறிலங்கா ஓடிப்போளது குறித்தும் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடு என்ன? ஐநா மனிதவுரிமைப் பேரவையில் இயற்றப்பட்ட தீர்மானங்களில் இந்தியா தொடர்ச்சியாகவும் முன்பின் முரணின்றியும் கடைப்பிடித்துள்ள கொள்கை நிலைப்பாடு என்ன?

ஈழத் தமிழினம் கோருவது இனவழிப்புக்கு ஈடுசெய் நீதி, குற்றவியல் நீதியும் அரசியல் நீதியும்! இந்தியா ஏனோதானோ என்று முன்வைப்பது தமிழர்களால் மறுதலிக்கப்பட்ட 13 ஆம் திருத்தம்! இது மோசடியான கேலிக்கூத்து என்று கருநிலையிலேயே தலைவர்கள் சிவசிதம்பரமும் அமர்தலிங்கமும் சம்பந்தர் ஐயாவும் தோலுரித்துக் காட்டிய பின் அதையே வரலாற்றின் குப்பைத் தொடடியிலிருந்து தூக்கி வந்து சீவி சிங்காரித்து அம்பலத்தில் ஆடவைக்க இந்தியா செய்யும் சூழ்ச்சிக்குப் பலியாகலாமா தமிழர்கள்?

பரமபத விளையாட்டு போல் இது இந்தியாவின் 13 பத விளையாட்டு ! தமிழனம் போரிலே தோற்றபின் வெற்றியாளரின் நீதிக்குத்தான் பணிந்து போக வேண்டும் என்று சிங்களப் பேரினவாத அரசுக்கு அடங்கிப் போகச் சொல்லும் இரண்டகக் கும்பல் ஒரு பக்கம் ! இந்தியாவின் விரிவாதிக்க அரசியலுக்குத் துணைநின்று அது ஈவதை இரந்து பெற்றுக்கொள்ள ஓடேந்தி நிற்கும் இரவலர் கும்பல் மறுபக்கம் ! இந்த இரண்டகர்களையும் இரவலர்களையும் எதிர்த்துப் போராடி வெல்வதுதான் விடுமை வாழ்வுக்கு வழி !

இந்தியாவுக்கு என்ன வந்தது? அது ஏன் 13 ஆம் திருத்தத்தைப் பிடித்துக் கொண்டு தொங்க வேண்டும்? இந்திய வல்லரசின் புவிசார் அரசியல் அப்படி! சீனக் கொள்ளையருக்கும் இந்தியக் கொள்ளையருக்கும் இலங்கை என்னும் கொள்ளைப் பொருளைப் பங்கிட்டுக் கொள்வதில் போட்டி ! இலங்கை என்னும் சதுரங்கப் பலகையில் தமிழர்களைப் பகடைகளாக உருட்டுவது இந்தியாவின் உத்தி! அதற்காகத் தமிழீழ விடுதலையையும் ஏற்றுக் கொண்டு விடக் கூடாது! தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு! பன்னாட்டு நீதிப் பொறிமுறை! குற்றவாளிகளைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்றுவது! பொதுவாக்கெடுப்பு வழியிலான அரசியல் தீர்வு! இவற்றிவல் எதுவும் சிங்கள அரசை மிரட்டிக் கைக்கடக்கமாக வைத்துக் கொண்டே சீனச் செல்வாக்கைக் கட்டுப்படுத்த உதவாது. மாறாகத் தமிழர்களின் விடுமைப் பயிருக்கு இவையெல்லாம் நீர் பாய்ச்சுவாதி விடும். 13 ஆம் திருத்தம் வெறும் புழு! யாரையும் கடிக்காது. 13 ஆம் திருத்தம் தமிழ் மக்களின் எந்த உரிமையையும் மீட்டுக் கொடுக்காது. தமிழர் தாயகத்தின் மீதான வன்பறிப்பை (ஆக்கிரமிப்பை) முடிவுக்குக் கொண்டுவராது. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்துக் கொடுக்காது. சிறையில் அடைபட்டுள்ள போர்க் கைதிகளை விடுவிக்காது. தமிழ் நிலத்தின் சிங்கள பௌத்த மயமாக்கத்தைத் தடுக்காது. சிங்கள வன் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தாது.



உண்ணாவிரதம் இருக்கும் தியாகி திலீபனுடன் தமிழீழத் தேசியத்தலைவர்

13 ஆம் திருத்தத்துக்காக இந்தியக் குடுமி ஆடுவதேன்? இந்தக் கேள்விக்குத் தெளிவான விடை: முள்ளிவாய்க்காலுக்கு முன் நேர் இனவழிப்பக்குத் துணைபோன இந்திய வல்லரசு இப்போது தொடரும் கட்டமைப்பியல் இனவழிப்புக்கும் துணைபோய்க் கொண்டிருக்கிறது என்பதே! சச்சரிக்கை தமிழா!

---

## முத்துக்காடு ஊராட்சியில் தி.மு.க. அரசே !

வேங்கைவயல் டி.என்.ஏ. சோதனை பெயரில் வழக்கை பட்டியல் மக்கள் மீது சுமத்தாதே ! தலைவர் பத்மாவை பொறுப்பாக்கு ! அவரது கணவர் முத்தையாவை கைது செய் ! தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே சாதி மோதலை உருவாக்காதே ! ஊராட்சி மன்றக் கணக்கை தணிக்கை செய், முறைகேடுகளைக் கண்டுபிடி ! பட்டியலினமக்கள் உழுது பயிட்ட சுமார் 23 ஏக்கர் நிலங்களை மீட்டு அம்மக்களுக்கே உரிமையாக்கு ! அவ்வூரிலுள்ள இனாம், பினாமி நிலங்களைக் கைப்பற்றி இறையூரிலுள்ள முத்தரையர், அகமுடையர் ஆகிய ஏழை, கூலி விவசாயிகளுக்கு வழங்கு ! அய்யனார் கோவிலை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வா ! அதற்கான சட்டமியற்று ! ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து 19.06.2023 இல் பட்டினிப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. 01.06.2023 சின்னப்பா பூங்காவில் ஏற்பாடு செய்து அவ்விடம் அனுமதி மறுக்கவே, பிறகு புதுக்கோட்டை நகர உட்கோட்ட பகுதியான திலகர் திடலில் அனுமதி துணைக் கண்காணிப்பாளரிடம் கோரப்பட்டது. இறுதி நேரத்தில் 19.06.2023 காலை 8.00 மணிக்கு காவல்துறை அனுமதி மறுத்தது. காவல்துறையுடான பலகட்டப் போராட்டத்திற்குப் பிறகு 10.30-க்கு துணைக் கண்காணிப்பாளர் கடிதம் மூலம் அனுமதி மறுக்கப்பட்டது. பிறகு தமிழ் தேச இறையாண்மை, கம்யூனிஸ்ட் மற்றும் ஜனநாயக அமைப்பினர் அனுமதியை மீறி முழக்கமிட்டனர். தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டனர்.

மோடியின் பாசிசத்தை எதிர்ப்பதாக வாய்ச்சவடால் அடிக்கும் மு.க.ஸ்டாலின் பட்டினிப் போராட்டத்திற்கு அனுமதி மறுப்பது என்ன ஜனநாயகமோ?



**தோழர்கள் கைது செய்யப்பட்டு மண்டபத்தில்**



**‘தி.மு.க.வின் ஜனநாயகம் வாழ்க’ !**

கவிதை

\- செந்தில்




கடலோரம் நடக்கையில் காற்று
கருத்தோடு மோதுவதெல்லாம் சேருங்கள்!
உடலோடு உரசையில் காற்று
உருவாக்கும் புது ராகம் கேளுங்கள்!
அலைமோத இணைந்தாடும் காற்று
அழகாக்கும் புது காட்சி காணுங்கள்!

அதிகாலையும் பறவை குரலோசையும்!
அருகாமை-யில் தோன்றும் புது ஓசையும்!
ஒளிவானமும் இரவு விண்மீன்களும்
ஒளிக் காட்டும் துணை கோளும் அதன் கோள்களும்!

தோன்றும் மீண்டும் தோன்றும் மீண்டும் தோன்றியது தோன்றாமல் தோன்றும்.!

(கடலோரம்.. ...

மலை மீது ஏறி
குளம் ஒன்று தேடி
படகோட்டி பாடி படம் பிடிக்கிறோம்!
காடு ஒன்று தேடி
மரம் மீது ஏறி
குயில் போல பாடி கூத்தடிக்கின்றோம்!
இயற்கை நமக்கு நண்பனே
நாமோ இயற்கையின் செல்வமே
உயிர்க் கோள பூமியில் போர்க்கோலமா?
உருவான வாழ்வுக்கு அறமாகுமா?

(கடலோரம்.. ...

தொலை நோக்கி தேடி
புது பூமி தேட
புது வாழ்வு தேட படம் பிடிக்கிறோம்
தொலை பேசி பேசி
புளூ டூத்தில் பாடி
எல்இடி வெளிச்சத்தில்

கூத்தடிக்கின்றோம்
செயற்கை கருவியும் நண்பனே
நாமோ செயற்கையின் தோழனே
உன் நாடு என் நாடு போர்க்கோலமா?
தற்கால வாழ்வுக்கு தரமாகுமா?

கடலோரம் நடக்கையில் காற்று
கருத்தோடு மோதுவதெல்லாம் சேருங்கள்!
சேருங்கள்!

•

# சாலையோர வியாபாரிகள் ஆக்கிரமிப்பாளர்களா?

ச.பாலமுருகன் வழக்கறிஞர்



‘சென்னை மாநகராட்சியும் காவல் துறையும் இந்த ஆக்கிரமிப்பை எங்ஙனம் அனுமதிக்கிறது? இதுதான் சிங்காரச் சென்னையா?’ - சென்னை மெரினா கடற்கரையின் அருகில் உள்ள லூப் சாலையில் மீன் விற்பனையின் காரணமாகப் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுவதாக, ஏப்ரல் 11 அன்று உயர் நீதிமன்றம் தானாக வழக்குப் பதிவுசெய்து எழுப்பிய கேள்வி இது.

அதன் தொடர்ச்சியாக மாநகராட்சி அடுத்த நாளே அந்தச் சாலையில் மீன் கடைகளை அப்புறப்படுத்தியது. மீன்களைக் கீழே கொட்டி வாழ்வாதாரத்தை முடக்கிவிட்டதாகக் குமுறுகிறார்கள் மீன் விற்பனயாளர்கள். மாநகராட்சி நிர்வாகம் காட்டிய வேகம் வெறும் நீதிமன்றக் கேள்வி சார்ந்தது மட்டுமல்ல.

**முன்னோடித் தீர்ப்புகள்:** ஆக்கிரமிப்பு அகற்றம் என்பதைக்கூட மீன் விற்பனையாளர்கள், அப்பகுதி மக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஓர் உரையாடலை மேற்கொண்டு மனிதாபிமானத்துடன் செய்திருக்க முடியும். லூப் சாலை ஒரு குறியீடு மட்டுமே. நாடு முழுதும் இதுபோன்றே சாலையோர வியாபாரிகள் தங்களின் கண்ணியமான வியாபார உரிமையைப் பறிகொடுத்து குற்றவாளிகளைப் போல விரட்டியடிக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது. இப்பிரச்சினையில் நீதிமன்றம் ஒரு கட்சியாக மாறி நிற்பதுதான் இதில் வேதனை. காரணம், நீதிமன்றம் மக்களின் அடிப்படை உரிமையைக் காக்கும் அமைப்பு.

தெருவோர வியாபாரம், குடிமக்களுக்கு அரசமைப்பு வழங்கிய வியாபாரம் செய்யும் உரிமை சார்ந்தது. டெல்லி சாலையோர வியாபாரிகள் பாதிக்கப்படுவது தொடர்பான ‘சோதன் சிங் எதிர் டெல்லி மாநகராட்சி’ வழக்கில், சாலையோர வியாபாரம் அடிப்படை உரிமை என 1989இல் உச்ச நீதிமன்றம் அங்கீகரித்தது.

சாலை நடைபாதை நடப்பதற்கு மட்டுமல்ல, ஓரமாக வியாபாரம் செய்யவும் மக்களுக்கு உரிமை உண்டு எனக் குறிப்பிட்டது. 2010ஆம்

ஆண்டு, 'செண்டா ராம் எதிர் டெல்லி மாநகராட்சி' வழக்கில் உச்ச நீதிமன்றம் சாலையைப் பயன்படுத்துவோரும், சாலையில் வியாபாரம் செய்பவரும் சுமுகமாக அவரவர் பணிகளைச் செய்ய வழிவகை செய்யும்படி உள்ளாட்சி அமைப்புக்கு உத்தரவிட்டது. இத்தீர்ப்பு இருவரின் நலனும் முக்கியம் என்றது.

**முறைப்படுத்துதலின் அவசியம்:** மேற்கண்ட தீர்ப்புக்கள் சாலையோர வியாபாரிகளைக் கண்ணியத்துடன் நடத்த வழிகாட்டின. இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றினால் ஓர் ஆரோக்கியமான உரையாடலைப் பாதிக்கப்படுவோரிடம் மேற்கொள்ள முடியும். அவர்களைக் குற்றவாளிகளாகவும் ஆக்கிரமிப்பாளர்களாகவும் பார்க்கும் அதிகாரத்தனம் மற்றும் அதன் நீட்சியாக நிகழும் அத்துமீறலையும் தவிர்க்கலாம். அது எவரும் பாதிக்கப்படாத தீர்வை எட்ட உதவும்.

சாலையோர மீன் வியாபாரிகள் போன்ற முறைசாரா வணிகத்தின் மூலமே நாட்டின் உற்பத்தி வருவாயில் பாதி ஈட்டப்படுகிறது. நகர்ப்புறத்தில் உள்ள மக்கள்தொகையில் 2.5% தெருவோர வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள். பெல்லாஜியோ சர்வதேச சாலை வணிகத்துக்கான பிரகடனத்தில் (Bellagio International Declaration of Street Vendors) இந்திய அரசு 1995இல் கையெழுத்திட்டது.

அதன் அடிப்படையில் தேசிய சாலையோர வியாபாரிகளுக்கான கொள்கை வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கையில் தெருவோர வியாபாரிகளை அப்புறப்படுத்துவது என்பதற்குப் பதிலாக ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்துதல் முன்வைக்கப்பட்டது. 2014இல் தெருவோர வியாபாரிகள் சட்டம் உருவாக்கப்பட்டது.

சட்டத்தின்கீழ் இவ்வியாபாரிகள், அவர்களின் பிரதிநிதிகள் கொண்ட விற்பனைக் குழு உள்ளாட்சி நிர்வாகத்துடன் பேசி தெருவோர வியாபாரத்தை முறைப்படுத்துவார்கள். ஆக்கிரமிப்பு அகற்றம் என்பது விதிவிலக்காக மட்டுமே இருக்கும்.

**பாரபட்ச மனநிலை:** இந்த உரையாடல்கள், சட்ட வழிகாட்டுதல்கள் அனைத்தையும் முரட்டுத்தனமான ஓர் அதிகாரக் கரம் தள்ளிவிட்டுப் போவதே வழக்கமாக உள்ளது. இதில் ஒரு பாரபட்ச மனநிலை உள்ளது. சாலையில் கொட்டப்பட்ட மீன்கள் எளிய மக்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல, அரசமைப்பு வழங்கும் அடிப்படை உரிமையான தொழில் செய்யும் உரிமையைப் பறிப்பதும்தான். மேலும் இது சாலையோர உணவுப் பொருள்களை வாங்கும் ஏழை, நடுத்தர மக்கள் அனைவர்மீதும் நடத்தப்படும் மறைமுகத் தாக்குதலும்கூட.

சிங்காரச் சென்னைகளில் மீனவர்களும், குடிசைவாழ் ஏழைகளும் இல்லையா? அவர்களுடன் உரையாடலுக்கான எல்லா கதவுகளும்

நீதிமன்றத்தின் ஒரு சொல்லில் அடைக்கப்பட்டுவிட்டனவா? இப்படியான கேள்விகளும் தற்போது எழுந்திருக்கின்றன. சிங்கார நகரங்கள் என்பவை ஏழைகளின் வாழ்வாதாரத்தை அழித்து உருவாக்கப்படும் அழகு என்றால், அது ஒரு வெற்று ஒப்பனையாக மட்டுமே மிஞ்சும். தெருவோர வணிகர்கள் சமூகநீதியோடு நடத்தப்பட வேண்டும்.

மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாது எனத் தமிழ்நாடு அரசு உறுதியளித்ததன் பேரில் மீனவர்களின் போராட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக்கு இடையூறு இருக்கக் கூடாது என்று நீதிமன்றமும் அறிவுறுத்தியிருக்கிறது. இதுபோன்ற தருணங்களில் சட்டத்தின் சரியான வழிகாட்டுதலுடன், மனிதாபிமான அணுகுமுறையும் கைக்கொள்ளப்பட்டால் சங்கடங்கள் நேராது.



**மீனவர்கள் போராட்டத்தில் தமிழ்த் தேச இறையாண்மை சார்பில் தோழர்கள் பாரி, ஸ்ரீதர்**





2023 மே -27 ஆம்பூர் பெரியவரிவக்கத்தில் உள்ள சுரா டேனரி என்ற தோல் தொழிற்சாலை எதிரில் தமிழ்நாடு தொழிற்சங்கத்தின் சார்பில் கோருரிமைப் போராட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டின் முதுபெரும் பொதுமையர் சிங்காரவேலர் அவர்கள் தெற்காசியாவில் முதன்முதலில் மே நாள் முழக்கமிட்டதின் நூறாவது ஆண்டு நினைவு கூறும் வகையில் தோழர்கள் உரையாற்றினர். இதில் தமிழ்நாடு தொழிற்சங்க நடுவத்தின் பொதுச் செயலாளரும் தமிழ்த் தேச இறையாண்மையின் உறுப்பினரும் தோழர் ரூபன் மற்றும் தோழர் கரு.மாரியப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.










2023 ஜூன் மாதம் சென்னையில் மல்யுத்த வீரர்களுக்கு ஆதரவாக விவசாயிகள் ஐக்கிய முன்னணி மற்றும் மக்கள் பாதை பேரியக்கம் நடத்திய போரட்டங்களில் தமிழ்த் தேச இறையாண்மை சார்பில் அதன் பொருளாளர் தோழர் கரு.மாரியப்பன்.

---




2023 ஜூன் 13-ல் புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் ஒன்றியம் சொக்கநாதப்பட்டி கிராமம் கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ.) மக்கள் விடுதலையைச் சேர்ந்த தோழர் தங்கமணியை சாதியைக் கூறி இழிவுப்படுத்தி பேசி கொலை வெறியுடன் தாக்கிய ஜெயபால் மகன் சுதாகர் என்பவனை கைது செய்ய வலியுறுத்தி கண்டன முழக்கப் போராட்டம் சின்னப்பா பூங்கா, புதுக்கோட்டையில் தோழர் நா.சந்திரசேகரன் தலைமையில் நடந்தது. இதில் தமிழ்த் தேச இறையாண்மை (த.தே.இ) சார்பில் தோழர் பாரி.

---



2023 ஜூன் 12-ல் புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் "ஐயன் திருவள்ளுவர் சிலையை ஆர்.எஸ்.எஸ்.இடம் அடகு வைக்காதே! விவேகானந்தர் பாறையிலிருந்து திருவள்ளுவர் சிலைக்கு கண்ணாடிப் பாதை திட்டத்தை கைவிடு! குமரிக் கரையிலிருந்து திருவள்ளுவர் சிலைக்கு தனிப்பாதை அமைத்திடு!'' என்ற கோரிக்கைகளை தமிழ்நாட்டு அரசுக்கு முன் வைத்தும், இதனை விளக்கியும் தெரு முனைக் கூட்டம் நடைபெற்றது. முத்துக்குமார் பாசறை சார்பில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு தோழர் மீரா சத்தியகாந்தி தலைமை தாங்கினார். இதில் தமிழ்த் தேச இறையாண"மை (த.தே.இ.) சார்பில் தோழர் பாரி

## நன்றி மகனே

வாசல் கதவும்
வசதியானதுதான்
ஒளிந்து கொள்ள
இதமாய்
வாசலில்
கடன்காரன்
பதில் சொல்லும் முன்
பல முறை
திரும்பிப் பார்த்துச்
சொன்னான்
என் மகன்
அப்பா
வீட்டில் இல்லை

## ஏழை

இல்லை என்றுசொல்ல
மனமும் இல்லை
இருப்பதாய் காட்டிக்கொள்ள
பணமும் இல்லை
அறிவுரையை மட்டும்
அள்ளி தருகிறேன்
அழுத விழிகளோடு
அருகில் என் மகன்

## மீண்டும் நாங்கள்

கடந்து போன
ஆட்சிகளில்
நடந்து போன
திட்டம் என்ன
எவ்வளவு ஒதுக்கீடுகள்
எவ்வளவு பதுக்கீடுகள்
இது எதைப் பற்றியும்
கவலைப்படாமல்
வாக்கு விற்பனையில்
வாக்காளன்
அரியணை கனவுடன்
கரை வேட்டியில்
வெள்ளை சட்டை
வியாபாரிகள்
ஏமாற தயாராகி
எப்போதும்? நாங்கள்



## மரம் பேசுகிறேன்

உளி கொண்டு
சிலை வடித்தாய்
கலை பிறந்தது
கலைக் கொண்டு
மொழி வளர்த்தாய்
தமிழ் வளர்ந்தது
விதை கொண்டு
பயிர் வளர்த்தாய்
உணவு கிடைத்தது
எனைக் கொன்று
பணம் வென்றாய்
பூமி வரண்டது
இனி எதைக் கொண்டு
மழை கேட்பாய் மனிதா
பூமியோடு பந்தம்
அறுபட்டு கிடப்பது
நான் மட்டுமல்ல
நீயும் தான்.

## என்ன பயன்

அந்தியூர் முதல்
அம்மாபேட்டை வரை
ஆட்சியாளர்களின்
அகலப்பாதை
அடியோடு அழிக்கப்பட்டது
ஆயிரம் உயிர்கள்
மனிதம் இழந்த மனிதா
மண்ணுக்கும் மரங்களுக்கும்
மரணத்தை தந்துவிட்டு
மழை வேண்டி
கழுதைக்கும் கழுதைக்கும்
கல்யாணம் .



# வேங்கைவயல் மலத்தில் திராவிட மடல்




19-06-2023 புதுக்கோட்டை திலகர் திடலில்
வேங்கைவயல் நீதிக்கான பட்டினிப் போராட்டம் அனுமதி மறுப்பு.
தோழர்கள் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் இருந்த போது